A pretty little Temperance story comes to our ears, and seems good enough to pass along. A young woman, formerly of Belfast, Maine, some years ago went West, and in Mountana married a prosperous ranch owner. The man, honourable and respected, was one of those men given to making the dangerous and too often fatal boast that "liquor did not affect him." He could take a glass, or he could let it alone." After a few years a Temperance movement was started in the town near his ranch; and one after another the members of his family and the men on his ranch joined the Lodge of Good Templars. For a year or more they attended this Lodge faithfully, always pleading with "John" to join them, and always receiving the answer that he had "no

The Temperance Herald.

மதுவிலக்குத் தூதன்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்—குறள்.

1910 ௵ ஆகஸ்டு ௴.

Whisky Duty and Decrease of Drunkenness.

உவிஸ்கி வரியும், குடியின் குறைவும்.

உவிஸ்கி என்னுஞ் சாராயம் வெகு காலமாக ஸ்காட்லாந்தின் நஞ்சாகவும் ஐர்லாந்தின் சாபமாகவு மிருந்து வருகிறது. முப்பது வருஷங்களுக்கு முன்னர் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் விஸ்கி சாராய மென்பது கிடையாது. பிரசித்திபெற்ற சார்லஸ் டிக்கின்ஸ் காலத்தில் இங்கிலாந்தில் பணக்கார ராயிருந்தவர்கள் பிராந்தியும், ஏழைகள் பீரும் அருந்தினார்கள். அதற்குப் பிறகு தான் பிராந்தி யருந்துதல் குறைந்து விஸ்கி யருந்துதல் ஆரம்பித்து தேசத்தில் வேர்கொண்டது. துர் அதிர்ஷ்டாதீனமாய் விஸ்கியின் விலை பிராந்தியை விட சரசமாய்ப் போக எவ்வித காரியங்களிலும் எல்லாச் சமயங்களிலும் அது மலிவா யுபயோகிக்கப்படுகிறது. தற்காலம் ஐக்கிய இராச்சிய முழுமையிலும் விஸ்கி நடமாடாத விருந்தாவது கேளிக்கைக் கூட்டமாவது கிடையாது. ஆகவே தற்போது அதனால் விளைகிற கேடுபாடுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் அளவில்லை. அறிவாளிகள் பலர் ஒப்புக்கொண்டிருக்கிறபடி விஸ்கியென்னும் நஞ்சானது இங்கிலீஷ்காரரின் அபிவிர்த்திக்குப் பெருத்த இடறுதற் கட்டையாயிருக்கிற தென்பதற்கு ஆக்ஷேபமேயில்லை. இதனையுணர்ந்த பெருந்தகைமையுள்ள கவர்ன்மெண்டார் சில காலத்துக்கு முன்னர் இந்த விஸ்கிக் குடியைத் தேசத்தில் மட்டுப் படுத்துதல் உசிதமெனக் கண்டறிந்து வர்த்தக கோஷ்டிகள் பலருடைய ஆக்ஷேபனைகளுக் கிடையில் விஸ்கியின்மேல் காலனுக்கு 3 ஷிலிங் 9 பென்ஸ் வீதம் ஒரு புது வரியை விதித்தார்கள். இந்த வரிவிதானத்தால் தற்சமயம் கிரேட் பிரிட்டன் முழுமையிலும் விஸ்கி யருந்துதல் மிகவும் குறைந் திருக்கிற தெனக் கேட்டு மகிழ்கிறோம். சென்ற ஜூன் மாசத்தில் பொக்கிஷ மந்திரி அரசிறை கணக்கு விவரங்களைப் பார்லிமெண்டு சபையில் எடுத்துக் கூறின காலையில் விஸ்கியின் வரி விதானத்தை அதிகமாய் ஆதரித்துப் பேசி அதனால் நாட்டில் நன்மை விளைந்திருக்கிற தென ரூபித்தார். அவர் முதன்மையாய் இந்தவரியினால் கவர்ன்மெண்டுக்கு லாபமே யொழிய நஷ்டமில்லையென்று சொல்லி விட்டு, ஜனங்களுக் கிதனாலுண்டு பட்டிருக்கிற சௌகரியத்தைப் பற்றிப் பிற்கூறியவாறு பேசினார்.—"இந்த வரிவிதானத்தால் ஜன சமூகத்துக்கு மிகப் பரிஷ்காரமாய் லாப முண்டாயிருக்கிறது. அதனுடைய பலன்கள் ஆச்சரியத்துக் கிடமாயிருக்கின்றன. பீர் அதிகமாக நடமாடாமல் விஸ்கி அதிகமாய் நடமாடும் பாகங்களைக் கவனிக்கிற பொழுது, அவ்விடங்களில் இவ்வரி விதானமுண்டான நிமிஷமுதல் குடி மட்டுப்பட்டிருக்கிறது. இதனை

லுண்டான நன்மை உடனே விளைந்தது மாத்திரமன்று. தொடர்ச்சியாய் வளர்ந்துகொண்டும் வருகிறது. முதல் மாதத்திலேயே குடியில் குறைவுண்டாயிற்று. ஸ்காட்லாந்தின் கணக்கு விவரம் என்னிடத்திலுண்டு. அங்கே போனவருஷத்தில் கடைசி ஒன்பது மாசங்களையும், இந்த வருஷத்தில் முதல் மூன்று மாசங்களையும் ஒத்திட்டுப் பார்க்கையில், குடிவெறியினால் தண்டனைபெற்றவர் தொகை நூற்றுக்கு 33 வீதம் குறைந்திருக்கிறது. கிளாஸ்கோ நகரத்துக் கணித விவரத்தைக் கவனித்தேன். அங்கே 1909ளு மார்ச்சுமாதத்தில் குடி வெறியால் தண்டிக்கப்பட்டவர் தொகை அதிகமாயேறியிருக்கிறது. பின்னால் விஸ்கிக்கு வரி விதிக்கப் போகிறார்களே அதனால் இப்போதே கொஞ்சம் அதிகம் சாப்பிட்டு விடுவோமென்று ஜனங்கள் அந்த மாசத்தில் அதிகமாய்க் குடித்தார்கள் போல் காணப்படுகிறது. எப்பிரல் மாதத்திலும் அத்தொகை குறையாமலேயிருந்தது. ஆனால் மே மாதத்தில் தண்டனையடைந்தவர் தொகை 1100 இலிருந்து 800க்கு இறங்கி விட்டது. அது முதல் குறைவுபட்ட தொகையாகவேயிருந்துவருகிறது. எடின்பரோ நகரத்துச் சிறைச்சாலையிலிருக்கிற பாதிரியாரிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்திருக்கிறது. அதில் எப்பிரல் முதல் டிசம்பர் வரையில் அச்சிறைச்சாலைக்கு வருகிற குற்றவாளிகள் தொகை முந்தின வருஷத்துக்கு இரண்டாயிரம் போல் குறைந்திருக்கிறதாகக் கண்டிருக்கிறது. இந்தக் குறைவுக்கு விஸ்கி வரி விதானமே காரணமென்று அச்சிறைச்சாலை அதிகாரிகள் சொல்லுவதாயவர் எழுதுகிறார். மேலும் சன்மார்க்க முறையில் கவனிக்குங்கால் விஸ்கிவரியால் ஜன சமூகத்துக்கு அளவிறந்த நன்மையுண்டாயிருக்கிறதென்றும், சுயநலப் பிரியரான சிலர் அதை யாக்ஷேபித்த போதிலும் பொது ஜன நன்மையைக் கருதுவதே நமது கடமையென்றும் அககடிதத்தில் கண்டிருக்கிறது. ஸ்காட்லாந்தில் கீர்த்திவாய்ந்த கலாசாலைத் தலைவரொருவரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதில் அவர் கூறுவதென்னவெனில்:— “நீங்கள் விஸ்கி வரிவிதானத்தை இவ்வருஷந் தளரவிடுகிற பக்ஷத்தில் தேசத்துக்கே கேடுண்டாகுமென்று நானினைக்கிறேன். முனிசிபல் பரிபாலனத்திலும் பொது ஜனங்களோடு பழகினதிலும் இந்த இருபத்து மூன்று வருஷகாலமாய் எனக்குண்டாயிருக்கிற அனுபவத்திலே நான் கண்டறிந்ததென்னவென்றால் இந்த வரி விதானத்தைப் போல வேறெந்த ஏற்பாடும் ஜனங்களுக்குள்ளே குடியை அவ்வளவு பலமாய்த் தடுக்கவேயில்லை” என்பதே. எடின்பரோ போலீஸ் கோர்ட் ஜாபிதாவைப் பார்வையிடுகையில் குற்றவாளிகள் தொகை மிகவுங் குறைந்திருக்கிறது. இது ஸ்காட்லாந்து தேசத்து சங்கதி. அங்கு மாத்திரந் தானா? ஐர்லாந்திலுமப்படியேயிருக்கிறது. ஐர்லாந்தில் சில ஜில்லாக்களில் குற்றவாளிகள் தொகை நூற்றுக்கு 55 வீதமும் 70 வீதமும் குறைந்திருக்கிறது. வாட்டர்போர்ட் என்கிற ஒரே யிடத்தில் மாத்திரம் குற்றவாளிகள் தொகை சற்றதிகப்பட்டுப்போயிருப்பது விசனமான காரியம். இங்கிலாந்தை யெடுத்துக் கொண்டால் அங்கும் அதே வித குறைவு காணப்படுகிறது. சென்ற வருஷத்தை விட இந்த வருஷத்தில் குடி வெறியினால் தண்டனை பெறுவோர் தொகை 18000 குறைந்திருக்கிறது. இந்த வரி விதானத்தால் விஸ்கி விலையுயர்ந்து விட ஜனங்களுடைய வாங்குந் திராணி குறைவு பெற்றுவிட்டது. வாங்குவாரற்றுப் போகவும் 20 லக்ஷம் காலன் சாராயம் குடிப்பாரற்றுக் குறைந்து போயிற்று. இதினால் ஜனங்களுடைய சுகாதாரம் எவ்வளவு தூரம் விர்த்தியடைந்தது அவர்கள் வீடுகளில் மனரம்மியமும் சந்தோஷமும் எவ்வளவுக் கதிகப்பட்டதென்று இப்போது நான் சொல்லவியலாது. ஆனால் மேலே எடுத்துக் காட்டிய ஆதாரங்களைக் கொண்டு இந்த வரி விதானத்தை நிலைவரமாய் ஸ்தாபனஞ் செய்யாமல், எந்த பொக்கிஷ மந்திரியாகிலும் இவ்வரியை நீக்க முயலுவானேயாகில் அவன் பொதுஜன சமூகத்துக்குப்பெரிய அபகாரஞ்செய்த குற்றத்துளாவான் என்று நிதார்த்தமாய் நான்சொல்லுவேன்” என்று கூறி வரியை நீக்கப் போகிறதில்லையெனச் சொல்லி முடித்தார்.

இவர் எடுத்துக் காண்பித்த கணித விவரங்களைக் கவனித்த பிறகும் இந்த வரி விதானத்தால் நன்மையில்லையென்றுசொல்லக் கூடுமா? விஸ்கி வரி விரும்பப்பட்டாலுஞ் சரி வெறுக்கப்பட்டாலுஞ் சரி, அதனால் தேசத்துக்கு நன்மையுண்டாயிரு

க்கிறதென்னமோ கரதலாமலகம் போலிருக்கிறது. ஆகவே அது கூடாதென வாதிக்கிறவர்கள் தேச நன்மையை நாடாமல் சுய நன்மையை நாடுகிறவர்களேயாவார். சில பேர் மாத்திரன்தான் இந்த வரியை இவ்வருஷம் நீக்கிவிட வேண்டுமெனப் போராடினார்கள். ஆனால் பொக்கிஷ மந்திரி சொன்னபடி அவ்வாறு செய்யத்துணியும்மந்திரி பொதுஜனங்களுக்குப் பெருத்த அபகாரத்தையே செய்தவராவார். மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் இவ்வகையில் நடந்து கொண்ட தீரத்துக்காக அவரை மெச்சிக் கொள்ளுகிறோம். பெருந் தகைமையுடைய லிபரல் கவர்ன்மெண்டார் இதையொத்த பல முறைகளை யனுசரித்துக் குடி வெறி யென்னுங் கொடிய பசாசை கூடிய சீக்கிரம் தேசத்தை விட்டப்புறப் படுத்துவார்களென நம்புகிறோம்.

World Missionary Conference.
உலக மிஷனெரி ஆலோசனை சங்கம்.

சென்ற ஜூன் மாதத்தில் எடின்பரோ நகரில் நடந்தேறின உலக மிஷனெரி சங்கம் உலக முழுமையிலுமுள்ள கிறிஸ்தவ ஜன சமூகத்துக்கு ஒரு புதிய உயிரைக் கொடுத்திருக்கிறதென்று சொல்லவேண்டும். கிறிஸ்துவினடியார்கள் தனித்தனியாகவும் சபையாகவும் உலகத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகளை இச்சங்கம் எடுத்துக் காண்பித்திருக்கிறது. பூலோக முழுமையுஞ் சென்று சுவிசேஷத்தைக் கூறுகிற கிறிஸ்துவின் தாசருக்கு இது ஒரு புதிய ஆலோசனையையும் புதிய பலத்தையும் கொடுத்திருக்கிறதோடு, தற்காலம் பல பிரிவாகப் பிரிந்திருக்கும் கிறிஸ்து சபைகளுக்குள்ளும் ஒருவித ஒற்றுமையின் ஆவியை உற்பத்தி செய்திருக்கிறது. சுவிசேஷ பிரபல்ய விஷயத்திலாவது சகல சபைகளும் ஏகோபித்து உழைப்பது அவசியமெனத் தூண்டிக் காட்டியிருக்கிறது. உரோமைசபை, கிரேக்குசபை யிவை நீங்கலாக ஏனைய எல்லாப் புரோடெஸ்டாந்து சபைகளும் இவ்வித ஐக்கியத்துக்குத் தூண்டப்பட்டிருப்பது மிகவுங் கவனிக்கத்தக்க விஷயம். உரோமை சபையாருள்ளும் இந்த முயற்சியை ஆதரித்துப்பேசும் உத்தமரிருக்கிறார்களென்று காண் சந்தோஷமுண்டாகிறது. கிரிமோனா உரோமை பிஷப் தாம் இம்முயற்சியை மகிழ்ச்சியோடு ஆதரிப்பதாகவும், விசுவாசத்திலும் சன்மார்க்க ஒழுக்கத்திலும் ஐக்கிய பாவத்தை யாசிப்பது நியாயமென்றும், இத்தகைய முயற்சியில் சகல கிறிஸ்தவர்களும் ஒன்று சேர்வது அவசியமென்றும், புரோடெஸ்டாந்து சபையார் தங்கள் விகற்பங்களைப் பாராட்டாமல் இவ்விஷயத்தில் ஒன்று சேர்ந்தது புகழ்ச்சிக்குரியதென்றும் இவ்வாலோசனை சங்கத்தாருக் கெழுதித் தெரிவித்தார். இது கிறிஸ்து சபையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உத்தம அறிகுறியென்று சொல்ல யாதொரு தடையில்லை.

இச்சங்கத்தின் முழு நடவடிக்கைகளையும் நாமிச்சிறு பத்திரிகையிலெடுத்துரைப்பது கூடாத காரியம். சுருக்கமாய்ச் சில முக்கிய விஷயங்களைமட்டும் நமது பத்திரிகா நேயர்களின் பிரயோசனத்துக்கென்று எடுத்துக் கூறுகிறோம். இந்த வருஷம் எடின்பரோவில் கூடின இச்சங்கம் இவ்வகையில் மூன்றாவது. 1888-ல், லண்டனில் முதலாம் சங்கம் கூடிற்று. 1900-ல் இரண்டாஞ் சங்கம் நியூயார்க்கில் கூடினது. எடின்பரோ சங்கத்துக்கான முயற்சி இரண்டு வருஷங்களுக்கு முன்னாரம்பித்தது. இச்சங்கத்துக்கு 160 சபைகள் பிரதிநிதிகளையனுப்பின. உலகின் பல பாகத்திலுமிருந்து 1200 பிரதிநிதிகள் விஜயஞ் செய்திருந்தார்கள். இவர்கள் தவிர ரஜாவின்மேல் போயிருந்த அநேக ஸ்திரீபுமான்களான மிஷனெரிகள் வந்திருந்தார்கள். பிரதிநிதிகளில் 500 பேர் பிரிட்டிஷார். 500 பேர் அமெரிக்கர். 200 பேர் இதர கண்டங்களினின்று வந்தவர்கள். கூட்டங்கள் யுனைட்டெட் ப்ரீசர்ச் மிஷன் அஸம்பிலி மண்டபத்தில் நடந்தன. லார்ட் பால்பர் கூட்டத்தலைவராயிருந்தார்.

இவ்வாலோசனை சபையில் தர்க்கித்துப் பேசப்பட்ட விஷயங்கள் வெகு முக்கியமானதென்று நாமுரைக்க வேண்டியதில்லை. தேவனுடைய இராச்சியத்தின் பிரபல்யத்துக்கும், உலகமெங்குமுள்ள அடியார்களின் ஞான ஜீவ வளர்ச்சிக்கும் உரிய சாதக பாதகங்களெவை, அவைகளை யனுசரிக்கவோ தள்ளவோ வேண்டிய வழிவகையெவை என்கிற விஷயங்களைக்குறித்து தீர்க்கமாக ஆலோசனை செய்து முடிவுகட்

டினார்கள். இப்பிரபஞ்சத்தின்கண் அறிவாளிகளும் அனுபவஸ்தருமான பலபெரிய மஹாஷர் இதுவிஷயமாகத் தங்கள் ஆலோசனைகளைக் கொடுத்தார்களென்பதை நாம் மறக்கக்கூடாது. நாம் ஏற்கனவே சொல்லியிருந்தபடி அறிவாளிகளும் பொறுக்கியெடுக்கப்பட்டவர்களுமான இருபதிருபது பேர்கொண்ட கமிஷன் என்கிற விசாரணை சபைகள் எட்டு முக்கியமான விஷயங்களின்பேரில் தத் தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த ஆதாரங்களைக் கொண்டு விசாரணைபுரிந்து தத் தமபிப்பிராயங்களை மகாசங்கத்தில் அளிக்க, மகாசங்கம் தீர்க்கமாய் அவைகளைப் பரிசீலனைசெய்து தனது சித்தாந்தங்களை நிரூபணஞ் செய்தது.

சபைகளின் ஐக்கியத்தைப்பற்றி இச்சங்கம் கருதுகிறதென்னவெனில் தற்காலம் சபைகளுக்குள்ளிருக்கிற விகற்பங்களை அற்பமாய் பாராட்டவாவது, அவை தான் செய்யும் தீர்மானத்தால் அடியோடே போய்விடுமென்றாவது இச்சங்கம் நினைக்கவில்லை. அந்தந்த சபைகளுக்குள்ளுமிருக்கிற விகற்பங்களை யிகழாமல் கவுரவிக்கவே வேண்டுமென்றும், மொத்தத்தில் நமக்கவசியமெதுவோ அதன்பேரிலேயே நாம் சார்ந்திருக்க வேண்டுமென்றும், சகலசபைகளும் ஒரே மாதிரியாய் நடப்பதை நாம் விரும்பாமல், ஒரே சிந்தைக்குரிய ஐக்கிய பாவத்தை யடையப் பார்க்கவேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானித்தது. இதில் சகோதர ஐக்கியத்தோடே நாம் உழைக்கவேண்டுமென்றும், நமது தேவஊழியத்தில் ஒற்றுமையிருக்கவேண்டுமென்றும், கிறிஸ்துமார்க்க அவலம்பம் செய்பவர்கள் மனதில் நமது சபை வித்தியாசங்களைப்போடக் கூடாதென்றும் வற்புறுத்திக்காட்டப்பட்டது. கல்வியானது கிறிஸ்து மார்க்கத்துக்குச் செய்திருக்கிற நன்மைகளைப் பற்றிச் சிந்தித்தபோது, உலக முழுமையிலும் மிஷனெரிகள் கல்வியூட்டினது மிகுந்த பிரயோஜனத்தையளித்திருக்கிறதென்றும், அது கிறிஸ்துமார்க்க பிரபல்யத்துக்கு உத்தம ஏது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது விஷயமாக அநேக அறிவாளிகள் தங்கள் அபிப்பிராயங்களைக்கொடுத்தார்கள். வங்காளத்தில் சில காலத்துக்கு முன்னர் லெப்டினென்ட் கவர்னராயிருந்த சர் ஆன்ட்று பிரேஸர் சென்னையில் டாக்டர் மில்லர் செய்தவேலையைப் பற்றிப்புகழ்ந்து பேசி அதனாலுண்டான நன்மைகளை யெடுத்துக் காட்டினர். இந்தியாவில் இப்போது உற்பத்தியாயிருக்கிற சுஜாதியபிமானம் உயர்தரக் கல்வியால் தான் வந்ததென்றும். அது கிறிஸ்து மார்க்கத்தின் மூலமாய் நிறைவேறப் போகிறதென்றும் ஆக்ராவிலிருந்து போன மிஷனெரி ஒருவர் சொன்னார். புற மதஸ்தருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைப் பற்றி இச்சங்கம் தீர்க்கமாய் ஆலோசனை செய்தது. அனுபவம் நிறைந்த அநேகர் தங்கள் சிறந்த ஆலோசனைகளைக் கூறினார்கள். இது விஷயமாகப் பேசினவர்களெல்லாரும், நாம் நமது விரோதிகளுக்குப் பிரசங்கிக்கிறோமென்று நினையாமல் நம்மைப் போலவே உண்மையைக் கண்டறியவேண்டுமென முயலுகிற நம் சகோதரர்களுக்குப் பிரசங்கிக்கிறோமென்று நினைக்க வேண்டுமென்றும், மற்ற மார்க்கங்களில் மேன்மையும் நன்மையுமாகக் காணப்படும் சகல காரியங்களையும் கண்டறியவும், அவைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவும் வேண்டுமென்றும் பேசினார்கள். இதரமார்க்கங்களி லுள்ள தப்பறைகளை யெடுத்துச் சொல்லுவதாலன்று, அவைகளின் மேலான காரியங்களை யெடுத்துப் பேசுவதாலேயே அவர்களை நாம் வசப்படுத்தக் கூடுமென்றும், சகலமார்க்கத்தையும் பூரணப்படுத்துகிறவர் கிறிஸ்து என்று ரூபிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அயல் நாட்டு மிஷனெரிகளுக்கும் சுதேச ஊழியர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி ஆலோசித்த போது இச்சங்கம், முறிவுபட்டதாகக் காணப்படும் அச்சம்பந்த விஷயமாய் தன் அனுதாபத்தை யுணர்த்தினது. சென்னையிலிருந்து போன கனம் அஸரியா போதகர் இந்தியாவிலே மிஷனெரிகளுக்கும் சுதேச ஊழியர்களுக்குமுள்ள சம்பந்தம் முறிவுபட்ட நிலைமையிலிருக்கிறதென்றார். இந்தியரான பிரசங்கிகளுக்குள் இதைப் பற்றி திருப்திக் கேடுண்டென்றும் சில இடங்களில் மிஷனெரிகள் சுதேசிகளை உடன் ஊழிய ரென்றெண்ணாமல் தம் வேலையாட்களென்று எண்ணுவதுண்டென்றும் எடுத்துரைத்தார். பம்பாய் கவர்னராயிருந்த லார்ட் றே என்பவர், இந்தியராலேயே இந்தியாவில் சுவிசேஷம் பிரபல்யமாக வேண்டுமென்றும் அவர்களை மிஷனெரிகள் மதித்து நடத்த வேண்டுமென்றும், இந்தியருள் தமக்கு உற்றநண்பர்

பல றுண்டென்றுங் கூறினர். மேலும், சுதேச சபைகள் சுயாதீன மடைவதை நாம் விரும்பவேண்டு மென்றும், அவைகளை உற்சாகிப்பிக்க வேண்டு மென்றும் மிஷனெரிகள் அதற்காகப் பிரயத்தனப்பட வேண்டு மென்றும், சபை யென்பது மிஷனெரி சபை யாகவே யிருக்க வேண்டு மென்றும், அப்படி யில்லாவிடில் அதன் பெருமை குறைகிற தென்றும், மிஷன் ஊழியத்துக்காகப் பொருளையும் ஆட்களையும் சபைகள் கொடுக்க வேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானித்தது. இவைகளை யெப்போதுங் கவனிக்க நிரந்தர கமிட்டி யொன்று ஏற்படுத்தி விட்டுச் சங்கம் கலைந்தது.

Drunkenness—Its Evils and Remedies.

மதுபானத்தால் விளையும் கெடுதிகளும் அதை நிவிர்த்திக்கும் வழிவகைகளும்.

மதுசாரமென்றால் எல்லாவகை மதுபானங்களிலுமிருக்கும் வலிவுடைய போதையான வஸ்துவே. அது நல்லதோ கெட்டதோவென்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் அது செய்யும் வேலையை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

1. (a) வெளிப்படையாய்க் காணப்படும் கெடுதிகள்.

குடியன் குடித்திருக்கும் காலத்தில் கையில் மடியிலுள்ள பணத்தை எப்படிசெலவு செய்வதென்றறியாமல் எல்லாவற்றையம் வெகு சீக்கிரத்தில் இழந்து விடுகிறான். ஆதலால் அவன் ஆதரவற்றவனாய்த்திரிய வேண்டிவரும். இப்படியாக அவன் கையிலுள்ள பணமெல்லாம் செலவானபிறகு, தன் மனைவி மக்கள் மேலுள்ள நகைகளை அடமானம் வைத்துக் குடிக்கிறான். இவ்விதமாக நகைகளை தோற்றுவிடுகிறான். இதன் பிறகு வீட்டிலுள்ள மனைவி மக்களுடைய உடுப்புகளையும், மேஜை, நாற்காலி, உரல், உலக்கை முதலான பொருள்களையும் ஒன்றன்பின் ஒன்றாய் விற்றுக்குடிக்கிறான். பொருள்களெல்லாம் ஆனபிறகு தன் பிதிராஜியம் அல்லது சுயராஜியமாயிருக்கும், வீடு, வாசல் காணி, பூமி, உற்பத்தி, உடமைகளனைத்தையும் அடமானம் வைத்துக்குடிக்கிறான் இவ்விதமாக கடன் மேலிடுகிறது. கடனுக்குள் அமிழ்ந்து விடுகிறான். கடன் கொடுக்க வழியற்றவனாகும்போது. கடன் கொடுத்தவன் இவைகளை சர்க்கார் மூலமாக ஏலம்போட்டு எடுத்துக் கொள்ளுகிறான். இவ்விதமே தன் கையிலுள்ள பணத்தையும், மனைவி மக்களுடைய நகைகளையும், வீடு, வாசல் காணி பூமி எல்லாவற்றையும் வெகு சீக்கிரத்துக்குள்ளாகவே இழந்து விடுகிறான்.

கடன் மூலமாக பணம் கிடைக்க வழியில்லாமல் போகும்போது, அடுத்த வீட்டிலுள்ள பொருள்களைத் திருட ஆரம்பிக்கிறான். இவ்விதமே நாள் செல்ல செல்ல பெரிய திருடனாகி, போலீஸாரால் பிடிக்கப்பட்டு சிறைசாலைக்குப் போகநேரிடுகிறது. குடித்திருக்கும் காலத்தில், யாரென்றும் பாராமல் சண்டையிட்டு, கை, கால், மண்டை உடைய நேரிடுகிறது. இதுமாத்திரமா? குடித்திருக்கும் காலத்தில் தன் சுயபுத்தி தனக்கில்லாமல் போகவே, தடுமாறி சாக்கடையில் விழுந்து கிடந்து, வழியில் தலைக்குத்தண்ணசரிந்து உருண்டுவண்டி சக்கரம் ஏறி, எலும்பு நொறுங்கிப் போலிஸாரால் பிடிபட்டு டாணாவில் அடைத்து வைக்கப்படுகிறான். இவன் உத்தியோகஸ்தர் இவனைப்பற்றிக் கேள்விப்படவே, உத்தியோகத்தைப் பிடிங்கிக் கொள்ளுகிறார்கள். இவனது சுய மரியாதையும் போய் விடுகிறது.

குடியனுடைய நிலைமை இவ்வாறாயிருக்க. இவனை நம்பிக் கொண்டிருக்கிற, மனைவி மக்கள், தாய் தந்தையர் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களை என்னவென்று எழுதலாகும். ஐயோ! பாவம் இவர்கள் உடுத்திக் கொள்ள வஸ்திர மில்லாமலும், உண்ண உணவில்லாமலும், வசிக்க வீடில்லாமலும், என்றும் கஷ்டத்தையே அனுபவிக்கிறார்கள். இவனுடைய பிள்ளைகள் சாப்பாட்டுக்காக வீடு வீடாய் அலைந்து திரிந்து யாசகமெடுக்க நேரிடுகிறது. கல்வி விஷயத்தைப் பார்த்தாலும் இவன் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய கல்வியைக் கொடாமலும், சன்மார்க்க விதியைப் போதியாமலும், அவர்களுக்கு துன்மார்க்கமான காரியங்களை தன் நடை, உடை, பாவனைகளால் போதிக்கிறான். இ

வனைப் பார்க்க இவன் பிள்ளைகளும் பெரியவர்களாகும் போது இவனைப் போலவே நடக்கப் பிரயாசப்படுகிறார்கள். ஆகவே இவன் தான் கெட்டுப் போகிற தல்லாமல், தன்பின்னடியாரையும் கெடுக்கிறான். இவன் இப்படி நடந்து கொள்ளவே, இவனது உற்றார், உறவினர் பகைக்கிறார்கள். இவனது சயப்பலம் ஒடுங்கித், துரும்பு போலாகிறான். இவ்விதமே இவன் சுகம்குறைந்து, திரேகம் வர வர மெலிந்து அதி சீக்கிரத்தில் இறந்துப் போகிறான். போதையாயிருக்கும் காலத்தில் தற்கொலை புரிந்து கொள்வதும், மற்றவர்களையும் கொலை செய்வது முண்டு. அகால மரணத்துக்கும் உட்படுவதுண்டு. குடியினால் வெளிப் படையாய்க் காணப்படும் கெடுதிகள் இவைகளே.

(இன்னும் வரும்.)

S. D. SAMUEL.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்

Teetotal Bishops Wanted:—ஆக்ஸ்போர் டிலுள்ள மிஸ்டர் தியடோர் டாட் என்பவர், மதுபானத்தை முற்றுந் தவிர்ப்பவர்களையே பிஷப் உத்தியோகத்தில் நியமிக்க வேண்டுமென்று "டேய்லி" நியூஸ்' பத்திரிகையி லெழுதி யிருக்கிறார். அவர் கூறுவது;—"பிஷப் அலுவலில் ஒன்று என்னவெனில் வாலிபர்களைத் தேவ ஊழியத்துக்கு அபிஷேகஞ் செய்வதும், சிறுவர்களைத் திடப்படுத்துவதுமாம். ஆகையால் நமது ஜன சமூகத்தைக் குடியின் சாபத்திலிருந்து நாம் விலக்க விரும்பினால் புதிதாக பிஷப் அலுவலுக்கு நியமிக்கப் படுவோரனைவரும் மதுபானத்தை முற்றுந் தவிர்த்தவர்களாயிருப்பது இன்றியமையாத காரியம். இப்போது இங்கிலாந்து சபை போதகர்களுள் அப்படிப்பட்டவர்களைக் காண்பது கஷ்டமல்ல என்று சந்தோஷமாய்க் கூறலாம்."

Alcoholism in Russia:—ருஷியாவில் மதுபான மருந்துதல் அஞ்சத் தக்க விதமாய் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. 'ஆங்கிலோ ரஷியன் கெஜட்' சொல்லுகிறபடி மதுபானம் வருஷத்தில் 2 லக்ஷம் ஜனங்களைக் கொல்லுகிறது. ஜனங்களுக்குள் மூளையிலே கெடுதியுண்டாகி வருகிற தென்றும், இது குடி வெறியின் அளவுக்குத் தருந்த படி அதிகரிக்கிறதென்றும் வைத்தியர்கள் கூறுகிறார்கள். தவிர அத்தேசத்தில் வருஷந் தோறும் 7 லக்ஷம் பிரஜைகள்க்ஷயரோகத்தால்மடிகிறார்கள். இது பெரும்பாலும் குடி வெறியாலுண்டாகிற தென்று சொல்லப்படுகிறது.

Prohibition in Sweden:—ஸ்வீடன் தேசத்தில் மதுபான வியாபாரத்தை நிறுத்திப் போடுவதைக் குறித்துப்பொது ஜன சம்மதம் கேட்கப்பட்டுவருகிறது. அங்குள்ள 54 லக்ஷம் பிரஜைகளுள் 32 லக்ஷம் பேர் இது விஷயத்தில் தங்கள் சம்மதங் கொடுக்கக் கூடிய உரிமை யுள்ளவர்கள். இவர்களில் 17 லக்ஷத்து 12,500 பேர் இதுவரையில் தங்கள் சம்மதங்களைத் தெரிவித்திருக்கிறார்களென்றும், அவர்களில் 17 லக்ஷம் பேர் மதுபான வியாபாரத்தை நிறுத்திவிட வேண்டு மென்றும் மற்றவர்கள் நிறுத்தக் கூடாதென்றும் தெரிவித்திருக்கிறார்களென்றுங் கேள்விப்படுகிறோம். நிறுத்துவதில் விருப்பமற்றோர் அதற்கு முகாந்தர மின்ன தென்று தெரிவிக்க வில்லையாம். நூற்றுக்கு 63 பேர் மதுபானத்துக்கு விரோதமாய்த் தங்கள் சம்மதங்களைக் கொடுத்திருக்கிறது புகழ்ச்சிக் குரிய காரியமாகும்.

The Curse of all Curses:—பிரிட்டிஷ் மந்திரிமாருள்ஒருவராகியமிஸ்டர் ஜோசெப் சேம்பர்லேன் சொல்லுவது:—குடி தேசத்தின் சாபம்; அது சுகத்தை யழிக்கிறது; ஜனத் தொகையில் 20 பேரில் ஒருவனுயிரைக் கொல்லுகிறது." பெரிய மதுபான வியாபாரியாகிய காலஞ் சென்ற சார்லஸ் பக்ஸ்டன் சொன்னது:—'நன்மையின் அபிவிர்த்தியை நாசஞ் செய்கிற எல்லா சக்திகளிலும் வல்லமையுள்ளது சாராயம். பீர் கடைக்கும் ஜின் அரமனைக்கும் விரோதமாக சகல கலாசாலைகளும் புஸ்தக சாலைகளும் சபைகளும் செய்யும் யுத்தம் மோக்ஷத்துக்கும் நரகத்துக்கும் நடக்கிற யுத்தம் போலிருக்கிறது." நியூயார்க் பட்டணத்து ரெவரென்ட் டாக்டர் ஸ்வேர்ட் டாட்ஜ்

கூறுவது:—"அழகான கண்ணாடி பாத்திரத்தில் வைத்தாலும் பழைய புட்டியில் வைத்தாலும் விஷம் விஷமே. குஷ்டரோகியை இரத்தாம் பரத்தாலும் பட்டுகளாலும் உடுத்துவித்தாலுஞ் சரி கந்தையாலுடுத்துவித்தாலுஞ் சரி அவன் குஷ்டரோகியே. பண்டோரா பெட்டி பொன்னாலாகிய சித்திர பெட்டியாயிருக்கலாம். ஆனால் அதன் மூடியைத் திறந்த வுடனே உள்ளே யிருந்து தீமை புறப்படுகிறது. சாராயக்கடையை இராஜ அரமனைபோல் அலங்கரித்து வைக்கலாம். ஆனால் கதவைத் திறந்தவுடனே துன்மார்க்கம் வெளியே வருகிறது; அதன் மாடங்களி லிருக்கிற புட்டிகளிலிருந்து மரண வாசனை புறப்படுகிறது; பிரதி கிறிஸ்தவனும், உத்தம தேசாபிமானியும், ஜன நன்மையை விரும்பும் பொது மனுஷனும் சாபங்களுக்குச் சாபமாயிருக்கிற இந்தக் குடியென்னுங் கேட்டை அடியோடே களைய முயல வேண்டும்."

Drink and Divorce:-லார்ட் கோரெல் தலைமையின் கீழ் நடந்தேறிய ராயல் கமிஷன் விசாரணையில் கொடுக்கப் பட்ட சாக்ஷியங்களின் மூலமாய் குடிக்கும் விவாக முறிவுகளுக்கும் நெருங்கிய சம்பந்த மிருப்பதாய் ஸ்பஷ்டமாகத் தெரிய வந்தது. குடி யே யில்லாது போனால் விவாக முறிவு வியாச்சியங்களுக்கு இடமே யிராதென்றும் விவாக முறிவுக்கு முக்கிய காரணம் குடி தானென்றும் லார்ட் கோரெல் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

Drink and Crime:—கார்டிப் ஜட்ஜ் லார்ட் கோல்ட்ரிட்ஜ் சமீபத்தில் தமது ஜூரிகளைப் பார்த்துச் சொன்னது:—நான் கவனித்த அளவில் பெரும்பாலான குற்றங்களுக்குக்குடியே காரணம். சென்ற 12மாத காலமாய் அதற்குரிய ஆதாரங்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். அதைச் சோதித்துப் பார்த்தால் நூற்றுக்கு 44 குற்றங்கள்குடியினால் விளைந்திருக்கிறது."

The King and Temperance:—மகாராஜ சக்கிரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் இங்கிலாந்து சபை மதுவிலக்குச் சங்கத்தின் போஷகராயிருக்கச் சம்மதித்திருக்கிறார். தவிர காலஞ்சென்ற எட்வர்ட் சக்கிரவர்த்தி தமது சுகத்தைக்கோரி குடிக்கும் பானம் மதுவாயிராமல் ஜலமாயிருக்கலாமென்று அனுமதித்திருந்ததை யிவரும் ஊர்ச்சிதஞ்செய்திருக்கிறார்.

A warning to Mothers:—சிலநாட்களுக்கு முன்னர் லண்டனில் நெல்லி புரூவர் என்கிற ஒருவாலிப ஸ்திரீ புதிய சட்டத்தின்படி மாஜிஸ்ட்ரேட்டிற்கு முன்புகொண்டுவந்து நிறுத்தப்பட்டாள். அவள் ஒரு பீர் கடைக்கு முன் நின்றுகொண்டு தன் கையிலிருந்த ஒன்றரை வயது குழந்தைக்குச் சாராயங் குடிப்பித்துத் தானுங் குடித்தாள் என்று கான்ஸ்டேபில் சொன்னான். அவள் குற்றத்தை யொப்புக் கொண்டாள். ஆனால் குழந்தை அதிக தாகமாயிருந்த தாயும். தான் குடித்துக் கொண்டிக்கையில் அது பாத்திரத்தைப் பிடித்து இழுத்துவாயில் வைத்துக் குடித்ததாயுங் கூறினாள். அவள் செய்தது பெரிய குற்றமானாலும் புதிய சட்டம் சமீபகாலத்தில் தானுண்டானபடியால் அவளுக்கு எச்சரிப்பு செய்து இன்னொரு முறை செய்யாதே என்று மாஜிஸ்ட்ரேட் அனுப்பி விட்டார்.

General News and Notes

பொதுவர்த்தமானக் குறிப்பு.

Aviation.—சென்ற ஒரு வாரத்தில் ஐரோப்பா கண்டத்தில் நிகழ்ந்த ஆகாயதகமனங்களைப்பற்றி அநேக தந்தி சமாசாரங்கள் வந்திருக்கின்றன. மிஸ்டர் கிரேஹாம் உவொயிற்றென்கிறவர் பிளாக்பூலிலிருந்து பிரைற்றன் வரையில் 25 மைல் தூரம் 27 நிமிஷத்தில் ஆகாயரதமேறிப் பறந்து போனார். லார்க் என்னுமிடத்தில் ஆகாயகப் பலேறிப் புறப்பட்ட டிரக்ஸெல் என்பவர் 6750 அடி உயரம் போனதாய்ச் சொல்லப்படுகிறது. இவ்வளவு தூரம் இது காறும் ஒருவரும் போகவில்லை. இவர் மேகங்களில் மறைந்துவிட்ட போது ஜனங்கள் அங்கலாய்த்தார்களாம். மேலே 6000 அடிக்கப்பால் வெகு குளிராயிருந்ததாம். குளிரால் விரைத்துப் போய் ஒரு

மணிநேரத்துக்குப் பின் வந்திறங்கினார். மியூனிச்சில் ஏழாம் பார்ஸிவல் என்கிற ஆகாயக்கப்பலில் 16 பேர் ஏறிப் பிரயாணஞ் செய்தார்கள். பிரஞ்சு அதிகாரிகள் டுேவேயிலிருந்து எமியன்ஸ் வரையில் ஆகாயரதத்தையும் 47 புறாக்களையும் பந்தயம் விட்டார்கள். ஆகாயரதத்தை நடத்தின லெப்லேன் என்கிறவர் எல்லாப்புறாக்களுக்கும் 6 நிமிஷத்துக்கு முந்தி குறித்த இடஞ்சேர்ந்தார். பாரீஸி லிருந்து லண்டனுக்கு ஆகாயத்தில் பறந்துபோவது சகஜமாய் விட்டது. லெப்ஞக், ஆபர்ன் என்ற இருவரும் பாரீஸிலிருந்து 1200 அடி உயரத்தில் பறந்து லண்டன் சேர்ந்தார்கள். இவர்களை ஜனங்கள் தோள்மேலேற்றிக் கொண்டு ஊர்வலம் வந்தார்கள். மாய்ஸன்ட் என்கிற அமெரிக்கன் அரைமணி நேரத்தில் இங்கிலீஷ் வாய்க்காலைக் கடந்து போனார்.

Aeroplanes in War:—அமெரிக்க இராணுவ உத்தியோகஸ்தர்கள் கர்டிஸ் என்பரால் செய்யப்பட்ட ஆகாயக்கப்பல்களிலிருந்து வெடிகுண்டுகளை யிறக்கிக் கப்பல்களையழிக்கும் உபாயத்தைப் பரிசோதனை செய்துபார்த்ததில், இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற முயற்சிகளில் இதைப்போன்ற அழிவிக்குரிய முயற்சி வேறில்லையென்று கண்டறிந்திருக்கிறார்களாம். யுத்த கப்பல்களுக்குப் பதிலாய் கேடங்களை வைத்து ஆகாயத்திலிருந்து வெடிக்கும் குண்டுகளைத் தள்ளிப் பரிசோதித்தார்கள். நாகரீகம் இன்னும் என்னென்ன சூழ்ச்சிகளைச் செய்விக்குமோ?

The Zeppelin Airships:—ஜெர்மனியில் லூஸரின் என்னுமிடத்தில் ஆகாயக் கப்பல்களில் கட்டணங்கொடுத்து ஜனங்களேறிப் பிரயாணஞ்செய்யும் ஏற்பாடு ஆரம்பமாயிருக்கிறது. ஜனங்கள் ஏரியைச்சுற்றியும் மற்றுமிடங்களுக்கும் பிரயாணஞ்செய்கிறார்கள்.

The Suffragette Movement:—ஜூலைமீ 22உ லண்டனில் கீழ் அந்தத்திலிருந்து மேல் அந்தத்தில் ஹைட் பார்க் வரையில் பெண்சுதந்தர வாதிகளின் பவனி நடந்தேறினது. பெருந்தொகையான ஸ்திரீகள் பலவித வர்ணங்களோடும் அலங்காரங்களோடும் பவனி சென்றார்கள். மிஸிஸ் ட்ரமண்ட் என்பவள் குதிரைமேலிருந்துகொண்டு பவனியை நடத்தினாள். இரத்த சாக்ஷிகள் என்று பேர்தரித்த ஸ்திரீகள் முன்னர் சென்றார்கள். மற்ற ஸ்திரீகள் பின்னர் சென்றார்கள். தென் ஆபிரிக்கா, ஆஸ்ட்ரேலேஷியா, அமெரிக்கா யூரோப் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஹைட் பார்க்கில் கூடின ஜனக்கும்பு அளவு கடந்தது. காற்பது இடங்களில் மேடைகள் போடப்பட்டு உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. இவர்கள் காரியமிவ்வாறிருக்க, இப்போது பார்லிமெண்டாரின் ஆலோசனையிலிருக்கிற பெண் சுதந்தரவாத மசோதாவைச் சட்டமாக்கக் கூடாதென்று இவர்களுக்கு விரோதமாய்க் கிளம்பி யிருக்கிற கக்ஷியார் பலமாய் ஆரவாரஞ் செய்துவருகிறார்கள். அந்தக் கக்ஷியில் பல பெரிய மனிதர்களுண்டு.

Death of Miss Florence Nightingale:—பலவருஷகாலம் வியாதின் படுக்கையிலிருந்த இந்த ஸ்திரீ இரத்தினம் ஆகஸ்டுமீ 14உ காலஞ் சென்று போனார்கள். இந்த அம்மாளின் மரணத்தால் உலகமுழுமையுங் கீர்த்தி பெற்ற ஒரு மேதாவியை இங்கிலாந்து இழந்து விட்டது. சென்ற மேமீ இந்த மாதுசிரோமணியின் 90-ம் வயது பூர்த்தியாயிற்று. தம் காலமெல்லாம் கன்னிகை யாகவே யிருந்து இங்கிலாந்தின் அரிய துணைவியா யிருந்தார்கள். சிறுமைமுதல் அடக்கமும் பரோபகாரசிந்தையும், தாழ்மையும், கிறிஸ்துவின் சிந்தையும் தரித்த இந்த மாது சிரோமணியை இங்கிலாந்து ஒரு நாளுமறவாது. கிரிமியன்யுத்தத்தில் யுத்தகளத்தில் புண்பட்டவரை அருகிருந்து தேற்றிப் பாதுகாத்து தேவலோக கன்னிகை யென்றும் தீபத் துரைபகள் என்றும் பேரெடுத்த இந்தப் புண்ணியவதியைப் போல இனி யார் எழும்பப் போகிறார்கள்? இங்கிலாந்தில் நர்ஸ் வேலையைக் கவுரவப்படுத்தின முதன்மையான மாது இவரே.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப்பத்திரிகை தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். $1\frac{1}{2}$ அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.